முடியாத நிலையிருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற காரணத்தால், அதை எடுத்துப் பார்த்து எவ்வளவு தூரத்திற்கு அப்பால் மற்ற மருத்துவமனைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்யலாமே யொழிய, ஆனால் அதிகமான மருத்துவமனைகள் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 226, திரு. காஞ்சி பன்னீர் செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

226—

காஞ்சீபுரம், செய்யாறு ஆகிய இடங்களுக்கும் இணைப்புப் பேருந்து இயக்குதல்.

*10043—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும்-வேலூருக்கும் இடையில் ஓடுகின்ற இணைப்புப் பேருந்தினை (Double-Bus) சென்னை-காஞ்சீபுரம், சென்னை-செய்யாறு ஆகிய இடங்களுக்கும் அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற சொல்லுக்கே இடம் இல்லாத ஒரு ஆட்சி இதயதெய்வம் புரட்ச்சித் தலைவி தலைமையிலே நடந்து கொண்டிருக்கிறது. அதிலும் அவர் எண்ணு கின்ற எண்ணத்தை செய்துகொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எப்படி வேலூரிலிருந்து சென்னைக்கு இந்த இணைப்பு பேருந்து களை அனுப்பி அதிக மக்களை அதிலே ஏற்றுகின்ற அளவிலே நீங்கள் செய்திருக்கிறீர்களோ, அதைப்போல காஞ்சிபுரத்திலே யிருந்து செய்யார் பகுதியிலே நிறைய மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலையை போக்கு கின்ற அளவிலே, சென்னை வேலூர் பகுதியிலே ஓடுகின்ற இணைப்பு பேருந்தைப் போல இந்தப்பகுதியிலும் அப்படிப்பட்ட பேருந்துகளை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா என அறிய விரும்புகிறேன்,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற நிலையே இந்த ஆட்சியில் என்றைக்கும் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைப்புப் பேருந்துகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இணைப்புப் பேருந்துகளுக்கு 77 இருக்கைகளுக்கு நாம் வரி கட்ட வேண்டியிருக்கிறது. அந்த இணைப்புப் பேருந்துகளில் பயணம் செய்பவர்கள், முதலிலே பயணம் செய்தால், மீண்டும் அந்த இணைப்புப் பேருந்திலே பயணம் செய்ய அவர்கள் விரும்புவதில்லை. ஆல்வே, வருமானம் குறைந்து கொண்டு இருக்கிற காரணத்தினாலே இதைக் காட்டிலும் மிக அழகான பேருந்துகளை ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே விடப்படுகிறது. ஆகவே, இது தேவையில்லை என்று குறிப்பிட்டேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 227 திரு கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஜெ. பாலகங்காதரன் கேட்கிறார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

227—

சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள்.

*11209—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் முந்திய வருடங்களில் நடப்பட்ட மரக்கன்றுகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பட்ட செடிகளில் பட்டுப் போனவைகளை மாற்றுவது (Replacement of casualities)—பற்றும் களை நீக்கி மண் கொத்தி விடுதல் (Soil working) போன்ற வேலைகள் செய்யப்பட்டு மரக்கன்றுகள் பராமரிக்கப்பட்டுகின்றன.